**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேருநரொருவராகப் பதிவுசெய்யப் படுவதற்குப் பதினெட்டு வயதை எய்தியுள்ள ஆளொருவரின் வயதைத் தீர்மானிப்பதற்கான தகைமையளிக்கும் தேதியாக பெப்புருவரி முதலாம் நாளை ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேருநர்களின் இடாப்பில் ஆளொருவர் தமது பெயரைப் பதிந்துகொள்வதற்காக ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் அவரின் வதிவிடத்தைத் தீர்மானிக்கும் தேதியாக ஏதேனுமாண்டில் பெப்புருவரி முதலாம் நாளை ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தேருநர்களின் இடாப்பினது மீளாய்வைத் தேர்தல்கள் ஆணையாளர் தொடங்கவேண்டிய தேதியாக ஒவ்வோரு ஆண்டிலும் பெப்புருவரி முதலாம் நாளை அல்லது அதற்கு முன்னதாக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் உட்புகுத்தப்பட்டவாறாக பிரிவின் சட்டப்பயனானது, தேருநர்களின் இடாப்பில் அவரின் பெயர் பதியப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு தகைமையுள்ளவராக இருக்கின்ற ஆளொருவருக்கு வெவ்வேறான தகைமையளிக்கும் தேதிகளையும் அது தொடர்பில் குறைநிரப்பு நிரல்களை தயாரிப்பதற்கும் பதிவு செய்யும் அலுவலருக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

